பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

20 04 2024 **SATURDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு நேற்று நடைபெற்ற முதல்கட்ட வாக்குப்பதிவில் 62 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

2. முதல்கட்ட வாக்குப்பதிவில் அதிகபட்சமாக திரிபுராவில் 80 புள்ளி ஒன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. .

3. மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 94 தொகுதிகளில் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறவுள்ளது.

4. மேற்காசியாவில் பதற்றத்தை தணிக்கும் வகையில் இஸ்ரேலும், ஈரானும் நடந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட ஏழு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

5. ஐஎஸ்எல் கால்பந்து போட்டியின் முதல் நாக்அவுட் சுற்று ஆட்டத்தில் ஒடிசா அணி 2-1 என்ற கோல்கணக்கில் கேரள அணியை வென்றது.

>>>>><<<<<<

மக்களவைக்கு நேற்று நடைபெற்ற முதல்கட்ட வாக்குப்பதிவில் சுமார் 62 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

உத்தரபிரதேசம், மேற்குவங்கம், பீகார், அஸ்ஸாம், மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, ராஜஸ்தான், தமிழ்நாடு, உத்ராகண்ட், அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர், மேகாலயா ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் நிகோபார், புதுச்சேரி உள்ளிட்ட 4 யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

தேர்தல் பொதுவாக அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளது.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பெரும் அளவிலான வாக்காளர்கள் திரண்டு வந்து வாக்களித்தனர்.

மேற்குவங்க மாநிலத்தில் முதல்கட்டமாக மூன்று மக்களவை தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் அதிகபட்சமாக 77 புள்ளி ஐந்து ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

உத்தரபிரதேச மாநிலத்தில் 8 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் 58 புள்ளி நான்கு ஒன்பது சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

பீகாரில் 4 தொகுதிகளில் 48 புள்ளி ஐந்து சதவீத வாக்குகளும், ராஜஸ்தானில் 8 தொகுதிகளில் 56 புள்ளி ஐந்து எட்டு சதவீத வாக்குகளும், மகாராஷ்ட்ராவில் 5 தொகுதிகளில் 55 புள்ளி மூன்று ஐந்து சதவீத வாக்குகளும், அஸ்ஸாமில் 5 தொகுதிகளில் 72 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

திரிபுராவில் மொத்தம் உள்ள 2 மக்களவை தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் நாட்டிலேயே அதிகபட்சமாக 80 புள்ளி ஒன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்ற தொகுதிகளில் ஆயிரத்து 625 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

பிஜேபி மூத்த தலைவர்கள் திரு. நிதின் கட்கரி, திரு. சர்பானந்த சோனாவால், திரு. கிரண் ரிஜிஜு, டாக்டர் ஜிதேந்திர சிங், திரு. சஞ்சீவ் பல்யான், டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், திரு. ஜிதேந்திர பிரசாதா, காங்கிரஸ் தலைவர்களான திரு. கவ்ரவ் கோகோய், திரு. கார்த்தி சிதம்பரம், திரு. நகுல்நாத், திமுகவின் திரு. தயாநிதி மாறன் ஆகியோர் முதல்கட்ட தேர்தலை சந்தித்த முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

தமிழகத்தில் 39 மக்களவை தொகுதிகளில் 72 சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பதாக தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

அதிகபட்சமாக, தருமபுரி தொகுதியில் 81 புள்ளி நான்கு சதவீத வாக்குகளும், கள்ளக்குறிச்சி தொகுதியில் 79 புள்ளி ஒன்று எட்டு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

சிதம்பரம் தொகுதியில் 74 புள்ளி எட்டு ஏழு சதவீத வாக்குகளும், பெரம்பலூர் தொகுதியில் 74 புள்ளி நான்கு ஆறு சதவீத வாக்குகளும், நாமக்கல் தொகுதியில் 74 புள்ளி இரண்டு ஒன்பது சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

கரூர், அரக்கோணம், ஆரணி, சேலம், விழுப்புரம், மக்களவைத் தொகுதிகளில் தலா 74 சதவீத வாக்குகளும், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி தொகுதிகளில் தலா 73 சதவீத

வாக்குகளும், கடலூர், விருதுநகர், பொள்ளாச்சி, நாகப்பட்டினம், திருப்பூர் தொகுதிகளில் தலா 72 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

திருவள்ளூர், தேனி, மயிலாடுதுறை, ஈரோடு, திண்டுக்கல், திருச்சி, கோவை, நீலகிரி, தென்காசி, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய தொகுதிகளில் தலா 71 சதவீத வாக்குகளும், திருநெல்வேலி, கன்னியாகுமரி தொகுதிகளில் தலா 70 சதவீத வாக்குகளும் பதிவாகின.

தஞ்சாவூர், ஸ்ரீபெரும்புதூர், வடசென்னை, மதுரை தொகுதிகளில் தலா 69 சதவீத வாக்குகளும், தென்சென்னை, மத்திய சென்னை தொகுதிகளில் தலா 67 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

வாக்குப்பதிவு முடிந்தவுடன், வாக்குப்பதிவு இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டன.

ஜூன் 4-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

தமிழகத்தில் கடந்த மக்களவை தேர்தலை விட இந்த தேர்தலில் அதிகமாக வாக்குகள் பதிவாகியுள்ளன.

2019ஆம் ஆண்டு வேலூர் மக்களவைத் தொகுதி நீங்கலாக, 38 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 71 புள்ளி ஒன்பது சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

அந்த தேர்தலில் தருமபுரி தொகுதியில் அதிகபட்சமாக 80 புள்ளி நான்கு ஒன்பது சதவீத வாக்குகளும், குறைந்தபட்சமாக தென்சென்னை தொகுதியில் 56 புள்ளி மூன்று நான்கு சதவீத வாக்குகளும் பதிவானது.

முதல்கட்ட வாக்குப்பதிவை அமைதியாக நடத்தி முடித்த தேர்தல் பணியாளர்களுக்கு தேர்தல் ஆணையம் நன்றி தெரிவித்துள்ளது.

மக்களவை தேர்தலில், முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்ற தொகுதிகளில் பெருமளவு மக்கள் திரண்டு வாக்களித்ததற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மக்களவைக்கு இரண்டாவது கட்டமாக, கேரளாவில் 20 தொகுதிகள், கர்நாடகாவில் 28 தொகுதிகள் உட்பட 13 மாநிலங்களில் உள்ள 89 தொகுதிகளுக்கு வரும் 26ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

அந்த தொகுதிகளில் மாநில மற்றும் தேசிய கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மூன்றாம் கட்டமாக அடுத்த மாதம் 7ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் நேற்று நிறைவடைந்தது.

வேட்புமனுக்கள் இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

>>>>><<<<<<

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் 11 பேர் கொண்ட ஆறாவது வேட்பாளர் பட்டியலை பகுஜன் சமாஜ் கட்சி வெளியிட்டுள்ளது.

வாரணாசி மக்களவைத் தொகுதியில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் திரு. அத்தர் ஜமால் லரி போட்டியிடுவார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அவர் மாற்றப்பட்டு திரு. சையத் நியாஸ் அலி போட்டியிடுவார் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

>>>>><<<<<<

மேற்காசியாவில் பதற்றத்தை தணிக்கும் வகையில் இஸ்ரேலும், ஈரானும் நடந்து கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட ஏழு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இஸ்ரேல் மீது மீண்டும் ஏவுகணை தாக்குதல் நடத்தினால் ஈரானுக்கு எதிராக புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று இவர்கள் எச்சரித்துள்ளனர்.

இத்தாலியில் **Capri** நகரில் நேற்று நடைபெற்ற வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இத்தாலி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Antonio Tajani** தெரிவித்துள்ளார்.

சமீபத்திய முன்னேற்றங்களுக்கு ஏற்ப இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ள விஷயங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஈரானின் மூத்த ராணுவ அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, பதிலுக்கு இஸ்ரேல் நாட்டின் முக்கிய ராணுவ தளங்கள் மீது, ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தியது.

இதன் காரணமாக மேற்காசியாவில் பதற்ற நிலை ஏற்பட்டதை அடுத்து, அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன.

>>>>><<<<<<

ஐநா சபையில் பாலஸ்தீனத்திற்கு முழு உறுப்பினர் அந்தஸ்து வழங்க வகைசெய்யும் பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானத்தை அமெரிக்கா தனது ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்துள்ளது.

15 உறுப்பினர்களை கொண்ட ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நேற்று இந்த தீர்மானம் வாக்கெடுப்பிற்கு வந்தபோது, 12 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

பிரிட்டனும், சுவிட்சர்லாந்தும் நடுநிலைமை வகித்தன.

ஆனால் அமெரிக்க தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்ததோடு, வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானத்தை ரத்து செய்துவிட்டது.

அமெரிக்காவின் நேச நாடுகளான பிரான்ஸ், ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

தீர்மானத்தை அமெரிக்கா ரத்து செய்ததால், பாலஸ்தீனத்திற்கு தனி நாடு என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற முடிவில் தங்களுக்கு மாற்றுக்கருத்து இல்லை என்றும், இதை பொறுத்தவரை இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே நேரடி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்பதையே அமெரிக்கா விரும்புவதாகவும் ஐ.நாவுக்கான அமெரிக்க துணைப் பிரதிநிதி திரு. **Robert Wood** தெரிவித்தார்.

வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்திய அமெரிக்காவுக்கு, பாலஸ்தீன அதிபர் திரு. **Mahmoud Abbas** கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், அமெரிக்காவின் முடிவை இஸ்ரேல் வரவேற்றுள்ளது.

>>>>><<<<<<

மாலத்தீவில் சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் லஞ்ச ஊழல் வழக்கில் முன்னாள் அதிபர் திரு. அப்துல் யாமீனுக்கு வழங்கப்பட்ட 11 ஆண்டு சிறை தண்டனையை அந்நாட்டு உயர்நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.

முன்னாள் அதிபர் மீதான வழக்கை மீண்டும் விசாரிக்க உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற வழக்கு விசாரணையில் ஏராளமான தவறுகள் நிகழ்ந்துள்ளதாக நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2022ஆம் ஆண்டு மாலத்தீவு குற்றவியல் நீதிமன்றம் திரு. அப்துல்லா யாமீனுக்கு 11 ஆண்டு சிறை தண்டனை விதித்தது.

அவர், தனது அதிபர் பதவியை தவறாக பயன்படுத்தி, ஒரு மில்லியன் டாலரை பெற்றுக்கொண்டு, அரசுக்கு சொந்தமான ஓய்வு இல்லம் ஒன்றை தனியாருக்கு விற்றதாக குற்றம் சாட்டப்பட்டது.

>>>>><<<<<<

கிழக்கு இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் அடுத்த சில நாட்களுக்கு வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா, மேற்குவங்கம், பீகார், ஜார்கண்ட், தெலங்கானா, ஆந்திராவின் கடலோரப் பகுதிகள், தமிழகத்தின் உள்பகுதிகளில் இம்மாதம் 23ஆம் தேதிவரை வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

வடமேற்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் அடுத்த 3 முதல் 4 நாட்களில் இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் தலைநகர் தில்லியில் அடுத்த சில நாட்களுக்கு பலத்த தரைக்காற்று வீசக்கூடும் என்றும், சில இடங்களில் மேகமூட்டத்துடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் புவனேஷ்வரில் நேற்று நடைபெற்ற முதல் நாக்அவுட் சுற்று ஆட்டத்தில் ஒடிசா அணி 2-1 என்ற கோல்கணக்கில் கேரள அணியை வென்றது.

இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டு சமநிலையில் இருந்ததால், வெற்றி தோல்வியை நிர்ணயிக்க கூடுதலாக 30 நிமிடம் ஒதுக்கப்பட்டது.

அதில், ஒடிசா அணி கூடுதலாக ஒரு கோல் போட்டு, வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள இரண்டாவது நாக்அவுட் சுற்றில் சென்னை அணி – கோவா அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

இன்று தில்லியில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<